# வலயக்கல்வி அலுவலகம் - வவுனியா வடக்கு

## இரண்டாம் தவணைப் பரீட்சை - 2022

### தமிழ்மொழியும் இலக்கியமும்

சுட்டெண் ...................................................... தரம்: 09 நேரம் - 2.30 மணித்தியாலம்

## பகுதி I

- **சரியான விடையின் கீழ் கோடிடுக.**

1) வைகறை வேளையில் ஒளி மலர்ச்சியாகக் காணப்பட்டது. இங்கு வைகறை என்பது?
   1) அதிகாலை 2) காலை 3) மதியம் 4) மாலை

2) “பூமாண்ட தீந்தேன் தொடை கீறி வருக்கை போழ்ந்து” இங்கு வருக்கை என்பது?
   1) வாழைப்பழம் 2) விளாம்பழம் 3) பலாப்பழம் 4) மாம்பழம்

3) இன்சொல் இனிது ஈன்றல் காண்பான். இங்கு இன்சொல் என்பதன் எதிர்ப்பதம்?
   1) இனிய சொல் 2) தீச்சொல் 3) நன்சொல் 4) வன்சொல்

4) ஔவையார் புகழ் பெற்ற பெரும் புலவர். இங்கு புகழ் என்பதன் எதிர்க்கருத்து?
   1) இகழ் 2) பகல் 3) நகல் 4) திகழ்

5) Sting என்பதன் கலைச் சொல் வடிவம்?
   1) கால் 2) கை 3) கொடுக்கு 4) வாய்

6) தலைவன் – தலைவி போல வீரன் என்பதன் எதிர்ப்பாற்சொல்?
   1) வீரத்தி 2) வீரை 3) வீராங்கனை 4) வீரி

7) கீரி – பிள்ளை என்பது போல தவளை – ..........................
   1) குட்டி 2) குஞ்சு 3) பேத்தை 4) தேரை

8) நஞ்சு, மழை, கடல் என்ற பொருள் குறித்த ஒரு சொல் யாது?
   1) மதி 2) அரி 3) ஏறு 4) ஆலம்

9) பொறியியலாளர்களாலும் முடியாத செயல்கள் சின்னஞ்சிறு உயிர்களால் முடிகிறது. இங்கு சின்னஞ்சிறு என்பது?
   1) இரட்டைக்கிளவி 2) அடுக்குத்தொடர்
   3) அடுக்கிடுக்குத்தொடர் 4) இணைமொழி

10) வீட்டின் முன்னால் இருந்த பட்ட மரம் ............................. முடிக்கும் சொல்லைத் தெரிவு செய்க.
   1) தலைத்தது 2) தழைத்தது 3) தளைத்தது 4) தழத்தது

11) தலைவா, வருக! வருக! இங்கு பயன்படுத்தப்பட்டுள்ள நிறுத்தக்குறிகள் எவை?
   1) வினாக்குறி, வியப்புக்குறி 2) காற்புள்ளி, முற்றுப்புள்ளி
   3) காற்புள்ளி, வியப்புக்குறி 4) வியப்புக்குறி, காற்புள்ளி

12) உன் மிடுக்கான பேச்சை உன்னிடமே வைத்துக் கொள். இங்கு வந்துள்ள பெயரடை?

1) உன் 2) மிடுக்கான 3) பேச்சு 4) வைத்துக்கொள்

13) நாவினால் சுட்டவடு. இங்கே வந்த ஆல் உருபு உணர்த்தி நிற்பது?

1) கருவி 2) கருத்தா 3) உடன்நிகழ்ச்சி 4) கோடற்பொருள்

14) பொன்னியின் செல்வன் என்னும் படத்தை மணிரத்தினம் தயாரித்தார்.

1) ஏவல் வாக்கியம் 2) வியங்கோள் வாக்கியம்
3) செய்வினை வாக்கியம் 4) செயற்பாட்டு வினை வாக்கியம்

15) வவுனியா வென்றது. என்பது எவ்வகையில் அமைந்த ஆகுபெயர்?

1) பொருளாகு பெயர் 2) சினையாகுபெயர்
3) இடவாகுபெயர் 4) காலவாகுபெயர்

16) "பாடினான்" என்பதன் வினையடி யாது?

1) பாடு 2) பாடி 3) பாடிய 4) பாடும்

17) முன்னேறு என்பதைப் பிரித்து எழுதினால் வருவது

1) முன் + னேறு 2) முன்பு + ஏறு
3) முன்னால் + ஏறு 4) முன் + ஏறு

18) நூலுக்கு இன்னொருவரால் வழங்கப்படும் உரை எவ்வாறு அழைக்கப்படும்?

1) வரவேற்புரை 2) பதிப்புரை 3) விமர்சனவுரை 4) அணிந்துரை

19) இளமையிற் கல்வி சிலையில் எழுத்து என்ற பழமொழியின் கருத்து?

1) நிலையான கல்வி 2) உத்தம நட்பு
3) தொடர் முயற்சி 4) மனவெளிப்பாடு

20) அ) தலை, உடல் மற்றும் பின்பகுதி

ஆ) எறும்புகளின் உடல் மூன்று பகுதிகளைக் கொண்டது.

இ) நடுப்பகுதியும் உடல் எனப்படும்.

ஈ) இவற்றுக்கு ஆறு கால்களும்

மேற் காணப்படும் வாக்கியங்களை ஒழுங்குபடுத்தினால் வரும் ஒழுங்கு யாது?

1) அ, ஈ, ஆ, இ 2) ஈ, இ, அ, ஆ 3) ஆ, அ, ஈ, இ 4) ஆ, அ, இ, ஈ

(20× 2 = 40 புள்ளிகள்)

## பகுதி II

- **எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

01) பின்வரும் தலைப்புக்களில் ஒன்றைத் தெரிவு செய்து 150 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.
   1) திருக்குறளின் பெருமைகள்
   2) அழகு நிறைந்த மலையகம்
   3) உயிர்களிடத்தில் அன்பு வேண்டும்
   4) வாசிப்பை நேசிப்போம்

(20 புள்ளிகள் )

02) நகர வீதிகளில் கொட்டப்படும் குப்பைகளை அகற்றுமாறு கோரி நகரசபைத் தலைவருக்கு 75 சொற்களில் கடிதம் எழுதுக.

(10 புள்ளிகள் )

03) பின்வரும் வினாக்களுக்குச் சுருக்க விடை தருக.
   1) எல்லாருக்கும் ஒவ்வொன்று எளிது என்பதை விளக்க ஔவையார் எடுத்துக்காட்டிய உதாரணங்கள் எவை?
   2) “அழுகிய மலர்கள் களைச் செடிகளை விட மோசமான நாற்றம் எடுக்கும்” என்ற தொடர் எந்த நாடகத்தில் காணப்படுகிறது?
   3) எறும்புக் குடும்பம் என்றும் கட்டுரையை எழுதியவர் யார்?
   4) சாக்கிரடீஸ் வாழ்க்கைச் சம்பவத்தின் மூலம் நாம் பெற்றுக் கொள்ளும் படிப்பினைகள் எவை?
   5) எழுந்து நடக்கின்றேன். இதயம் அழுகிறது என்ற வரிகளின் ஊடாக ஆசிரியரின் மனநிலை எவ்வாறு வெளிப்படுத்தப்படுகிறது?
   6) உழைக்கும் மக்கள் குடும்பங்களின் சீதனப் பொருட்கள் எவை?
   7) அழகு என்பதற்கு கனகாம்பரம் கொடுக்கும் விளக்கம் யாது?
   8) “வெயிலே நமக்குத் துணையாகும் – இந்த
      வேர்வைகள் எல்லாம் விதையாகும்” என்பதனூடாக ஆசிரியர் எதனை வலியுறுத்துகிறார்?
   9) எதுகை, மோனை வேறுபடுத்துக?
   10) விளம்பரத்தின் பண்புகள் இரண்டு தருக?

( $10 \times 2 = 20$ புள்ளிகள் )

04) பின்வரும் சொற்களை வைத்து பூரண வாக்கியம் அமைக்குக.
   1) கலி
   2) கீரியும் பாம்பும் போல
   3) அடவி
   4) இறை
   5) தேடித்தேடி

( $5 \times 2 = 10$ புள்ளிகள் )